**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, மானாமதுரை

2025ம் வருடம் டிசம்பர் மாதம் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைக்கால மனு எண்.8/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.5/2021**

1. பா.அம்மாபொன்னு

2.கவியரசன் ..மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள்

..எதிர்..

1. கே.பாண்டியம்மமாள்(இறப்பு)

2. ம.முத்துமணி

3. கேசவன்

4. அன்னலெட்சுமி

5. அசோக்குமார்

6. அன்புச்செல்வி

7. அரசுகுமார்

...1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் / 1 முதல்7 வாதிகள்

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 18.11.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, மனுவில் கண்டுள்ள 1 முதல் 5 ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A(3) மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய முக்கியமான ஆவணங்கள் என்றும் மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில் குறியீடு செய்ய இயலாமல் போனால் இந்த மனுதாரர்களுக்கு மன உலைச்சல் ஏற்படும் என்றும் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்தால் தான் உண்மை நிலை தெரியவரும் என்றும் எனவே மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கதக்கதில்லை என்றும் மனுவில் கூறியுள்ள விபரங்களை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது என்றும் மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரர்களுக்கு தெரியாமல் ஏற்படுத்தியுள்ள அனைத்து ஆவணங்களும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் மனுதாரர்கள் காலதாமதத்திற்குரிய காரணங்களை குறிப்பிடவில்லை என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதார்கள் தரப்பில், மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது என்றும் மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரர்களுக்கு தெரியாமல் ஏற்படுத்தியுள்ள அனைத்து ஆவணங்களும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் மனுதாரர்கள் காலதாமதத்திற்குரிய காரணங்களை குறிப்பிடவில்லை என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

5) இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய முக்கியமான ஆவணங்கள் என்றும் மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில் குறியீடு செய்ய இயலாமல் போனால் இந்த மனுதாரர்களுக்கு மன உலைச்சல் ஏற்படும் என்றும் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்தால் தான் உண்மை நிலை தெரியவரும் என்றும் எனவே மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும் அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை பெருக்கத்தை தடுக்கும் விதமாகவும் இந்த மனுவை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்றால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
Date: 2025.12.16 17:35:44 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
Date: 2025.12.16 17:35:14 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.